**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**<u>சாதாரணக் கூட்டப்பொருள்</u>**

2012ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## <u>பொருள்கள்</u>

<table>
<tr><th>மாமன்ற கூட்ட தேதி</th><th>வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள்</th><th>மாமன்ற தீர்மானம்</th></tr>
<tr><td>31.08.12</td><td>
1. தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான கழிவு செய்யப்பட்ட வாகனங்கள் TN69.4707 மெட்டட்டோர் வேன் (டீசல்) மற்றும் TN69.0286 மெட்டடோர் டீசல் ஆகியவற்றை உள்ளது உள்ள நிலையில் 11.07.2012ம் தேதியன்று மாநகராட்சி அலுவலகத்தில் பொது ஏலம் விடப்பட்டது. மேற்படி பொது ஏலத்தில் கீழ்க்காணும் விவரப்படி உள்ள நபர்கள் மட்டும் கலந்து கொண்டனர்.<br><br>
I) <u>TN69. 4707 மெட்டட்டோர் வேன் ஏலம் விபரம்</u>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் விவரம்</th><th>ஏலக்கேள்வி தொகை விவரம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு எம். சந்திரசேகர்,<br>686/2H,அன்னை தெரசா நகர் 3வது தெரு,<br>தூத்துக்குடி</td><td>ரூ. 26400/–</td></tr>
<tr><td>2.</td><td>திரு. என்.ராஜேந்திரன்,<br>மில்லர்புரம், தூத்துக்குடி</td><td>ரூ. 27700/–</td></tr>
<tr><td>3.</td><td>திரு. கே. மந்திரம்,<br>10பி, செல்வவிநாயகபுரம், தூத்துக்குடி</td><td>ரூ. 27800/–</td></tr>
<tr><td>4.</td><td>திரு. பி. பெரியசாமி,<br>24, நந்தகோபாலபுரம் மேற்கு, தூத்துக்குடி.</td><td>ரூ. 21500/–</td></tr>
<tr><td>5.</td><td>திரு. ஏ.பிச்சையா,<br>20, நயினார் ஆசாரி விளை வடக்கு, தூத்துக்குடி</td><td>ஏலக்கேள்வி கோரவில்லை</td></tr>
<tr><td>6.</td><td>திரு. ஏ. கனகராஜ்,<br>மெய்ஞ்ஞானபுரம், தூத்துக்குடி</td><td>ஏலக்கேள்வி கோரவில்லை</td></tr>
</table>
II) <u>TN.69.0286 மெட்டட்டோர் (டீசல்) ஏலம் விவரம்</u>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் விவரம்</th><th>ஏலக்கேள்வி தொகை விவரம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு எம். சந்திரசேகர்,<br>686/2H,அன்னை தெரசா நகர் 3வது தெரு,<br>தூத்துக்குடி</td><td>ரூ. 18200/–</td></tr>
</table>
</td><td>161) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td>2.</td><td>திரு. எஸ்.ஜெயசீலன் ஞானராஜ்,<br>மெய்ஞ்ஞானபுரம் தூத்துக்குடி</td><td>ஏலக்கேள்வி கோரவில்லை</td></tr>
<tr><td>3.</td><td>திரு. எஸ். கணேஷ்,<br>107ஜே/6, டி.எம்.பி. காலனி 1ம் தெரு, தூத்துக்குடி</td><td>ஏலக்கேள்வி கோரவில்லை</td></tr>
<tr><td>4.</td><td>திரு. எஸ். மாரிமுத்து,<br>111/கே1, போல்பேட்டை, தூத்துக்குடி</td><td>ரூ. 18300/–</td></tr>
<tr><td>5.</td><td>திரு. ஏ. துரைராஜ்,<br>31, திரவியபுரம் 1ம் தெரு, தூத்துக்குடி</td><td>ஏலக்கேள்வி கோரவில்லை</td></tr>
</table>
மேலே காணும் விவரப்படி TN69.4707 வாகன ஏலத்தில் ஆறு நபர்கள் ஏல பிணைய வைப்புத் தொகை ரூ.10000/– செலுத்தி கலந்து கொண்டனர். மேற்படி ஏலத்தில் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.27800/–க்கு வரிசை எண் 3ல் கண்டுள்ள நபர் திரு. கே.மந்திரம் என்பவர் ஏலம் கேட்டுள்ளார். அடுத்ததாக TN69.0286 வாகன ஏலத்தில் ஐந்து நபர்கள் ஏல பிணைய வைப்புத்தொகை ரூ.10000/– செலுத்தி கலந்து கொண்டனர். மேற்படி ஏலத்தில் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.18300/–க்கு வரிசை எண் 4ல் கண்டுள்ள நபர் திரு. எஸ்.மாரிமுத்து என்பவர் ஏலம் கேட்டுள்ளார். மேலும் ஏலதாரர்கள் யாருமே ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை.
எனவே மேற்படி ஏலதாரர் திரு. கே.மந்திரம் என்பவரின் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.28700/–ஐயும், மற்றும் எலதாரர் திரு.எஸ்.மாரிமுத்து என்பவரின் உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.18300/–ஐயும் ஏற்றுக் கொள்வதற்கும், மேற்படியார்களுக்கு ஏலத்தில் விடப்பட்ட வாகனங்களை எடுத்து செல்வதற்கு உரிய அனுமதியினை வழங்குவதற்கும், மேற்படி ஏலங்களில் கலந்து கொண்ட அனைவருக்கும் அவரவர்கள் செலுத்திய பிணைய வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
இ5/20572/2007
</td><td></td></tr>
<tr><td></td><td>2.</td><td>
இம்மாநகராட்சி வார்டு எண் 19, கதவு எண்கள் 16, 17, 18 வரிவிதிப்பு எண்கள் 191705, 191706, 191707க்கு பெப்பீஸ் ஹோட்டலுக்கு வரிகுறைப்பு செய்தது சம்பந்தமாக மாநகராட்சி வரிமேல் முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் வழக்கறிஞருக்கு கொடுக்கப்பட வேண்டிய கட்டணம் TAT 7/2011, 8/2011, 9/2011 3 x 3615 = 10845/–ஐ அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக் குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்
அ4/1558/12
</td><td>162) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>3.</td><td>
இம்மாநகராட்சி காமராஜர் சாலையில் லெவிஞ்சிபுரம் மேல்நிலைத் தொட்டிக்கு பம்பிங் செய்யப்படும் 250mm மெயின் உடைந்து தண்ணீர் வீணாவதை உடனே சரிசெய்ய மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.37403/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பதிவு செய்யலாம்.
மதிப்பீடு எண் 82/12–13
</td><td>163) பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td></td><td>4.</td><td>
தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள அனைத்து Maternity Centre-கள் மற்றும் அரசு மருத்துவமனையில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பிரிவிற்கு கணினிகள் தேவைப்படுவதாலும், மாநகராட்சி வரிவசூல் மையங்களில் உள்ள பிரிண்டர்கள் பழுதானால் மாற்று ஏற்பாட்டிற்காக பிரிண்டர்கள் தேவைப்படுவதாலும், தட்டச்சு, பொறியியல் மற்றும் வருவாய் பிரிவுகளுக்கு UPS-கள் தேவைப்படுவதாலும் கீழ்க்கண்ட விவரப்படி உள்ள பொருட்களை உரிய கணினி நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டியுள்ளது.
</td><td>164) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>விவரம்</u>**<br>1) கணினிகள் – 10 எண்ணம்<br>2) Dot Matrix Printers – 5 எண்ணம்<br>3) UPS (5KVA) – 3 எண்ணம்<br>4) 8 Port Switch – 4 எண்ணம்<br><br>எனவே மேற்படி விவரப்படி கண்டுள்ள பொருட்களை D.G.S&D. ரேட் விலை விகிதத்தில் உரிய கணினி நிறுவனங்களிடம் இருந்து வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ5/10867/2011 | |
| | 5. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நகர சுகாதார செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2012ம் வருடத்திற்கு சீருடைப்படி வழங்குவதற்கு, அரசாணை எண் 236 நாள் 01.06.2009ன்படி தலா ரூ.750/– வீதம் பத்தொன்பது நகர சுகாதார செவிலியர்கள், மூன்று மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு தொகையாக ரூ.16500/–ம் மற்றும் மூன்று பகுதி சுகாதார செவிலியர்களுக்கு சீருடைப் படியாக தலா ரூ.1200/– வீதம் வழங்க தொகையாக ரூ.3600/–ம் மொத்தமாக ரூ.20100/– தேவைப்படுகிறது. மேற்படி தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம்.<br>எச்4/507/11 | 165) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 6. இம்மாநகராட்சியின் 60 வார்டுகளிலும் வரிவசூல் செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. வரிவிதிப்பு செய்யப்படாத கட்டிடங்களுக்கு மேற்படி கட்டிடங்கள் இருக்கும் இடத்திலேயே வரிவிதிப்பு நிர்ணயம் செய்து வசூலிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. எனவே மேற்படி பணிகளுக்கு தேவையான 3G Data Card ஒன்று பெறுவதற்கும், E-Tender முறையில் டெண்டர்கள் Open செய்வதற்கு தேவையான 2G Data Card ஒன்றினை Upgrade செயவதற்கும் ஆகும் மொத்த கட்டணத் தொகை ரூ.4735/–ஐ அவசர அவசியத்தை முன்னிட்டு B.S.N.L. அலுவலகத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. B.S.N.L. அலுவலகத்தில் ரூ.235/– தொகையினை தள்ளுபடி செய்து விட்டதால் ரூ.4500/– மட்டுமே மேற்படி B.S.N.L. அலுவலகத்தில் செலுத்தப்பட்டது. மேலும் கூடுதலாக இதற்கான மாதக் கட்டணம் ரூ.2500/– வீதம் இரண்டு இணைப்புகளுக்கு ரூ.5000/– செலுத்த வேண்டும் என்ற விபரமும் பெறப்பட்டது.<br><br>எனவே மேற்படி தொகை ரூ.4500/–ஐ B.S.N.L. அலுவலகத்தில் செலுத்தியமைக்கு மாமன்ற ஒப்புதலும் கூடுதலாக மாதக் கட்டணம் ரூ.5000/–ஐ B.S.N.L. அலுவலகத்தில் செலுத்துவதற்கு மாமன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** 1) மாமன்றம் ரூ.4500/– செலுத்தியமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.<br>2) மாமன்றம் கூடுதலாக ரூ.5000/– மாத கட்டணம் செலுத்துவதற்கு அனுமதி வழங்கலாம்.<br>இ5/8446/12 | 166) அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| | 7. தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள இராஜாஜி பூங்காவில் சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக இருந்த பழைய நாவல்மரம் ஒன்று காற்றில் வேரோடு சாய்ந்து விழுந்து விட்டதால் அதனை 06.07.2012ம் தேதியன்று இராஜாஜி பூங்காவில் பொது ஏலத்தில் விடப்பட்டது. மேற்படி பொது ஏலத்தில் கீழ்க்கண்ட விவரப்படி நான்கு நபர்கள் மட்டும் கலந்து கொண்டார்கள். | 167) அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது |

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் விவரம் | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1. | திரு. கணேசன்,<br>10எச், பிரையண்ட்நகர் 5வது தெரு, தூத்துக்குடி | ரூ. 32000/— |
| 2. | திரு. ஜே.விஜயன்,<br>50பி, போல்டன்புரம், தூத்துக்குடி | ரூ. 29100/— |
| 3. | திரு. மணிகண்டன்,<br>58, அண்ணாநகர் 10வது தெரு, தூத்துக்குடி | ரூ. 11600/— |
| 4. | திரு. தி. அருண்,<br>40ஏ, போல்டன்புரம், தூத்துக்குடி | ரூ. 31600/— |

மேற்படி ஏலத்தில் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.32000/—க்கு ஏலதாரர் திரு.கணேசன் என்பவர் ஏலம் கேட்டுள்ளார். எனவே மேற்படி ஏலதாரர் திரு. கணேசன் என்பவரின் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.32000/—ஐ அவசர அவசியத்தை முன்னிட்டு ஏற்றுக் கொண்டு மேற்படியாருக்கு ஏலம் விடப்பட்ட மரத்தை அகற்றுவதற்கு வேலை உத்திரவு வழுங்கப்பட்டு மேற்படி மரம் அகற்றப்பட்டது. மேற்படி நடவடிக்கையினை மாமன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

இ5/15130/2011

8. இம்மாநகராட்சி வார்டு எண் 34, மடத்தூர் ரோடு, P & T காலனி, முருகேசன் நகர் பகுதியிலுள்ள குடிநீர் குழாய்களில் கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாவதை சீரமைக்க மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.44109/— செலவு செய்தது, மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் பதிவு செய்யலாம்.

மதிப்பீடு எண் 66/12—13

168) பதிவு செய்யப்பட்டது

9. இம்மாநகராட்சியின் பொதுசுகாதார பிரிவின் கீழ் இயங்குகின்ற நகர்நல மையங்களில் பணிபுரிந்து 31.05.2012, 30.06.2012 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற கீழ்க்கண்டுள்ள பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி மற்றும் அரசின் பங்கீட்டுத் தொகை ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியதுள்ளது.

| வ. எண் | பணியாளர் பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை | வட்டி | பங்கீட்டுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பா. கல்யாணி, பெண் உதவியாளர் | 30.06.2012 | ரூ.2960/— | ரூ.13766/— | ரு.10000/— | ரூ.26726/— |
| 2. | ரசூல்பீவி, மகப்பேறு உதவியாளர் | 31.05.2012 | ரூ.2960/— | ரூ.13662/— | ரூ.10000/— | ரூ.26622/— |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம்

எச்1/7995/2012

169) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10. இம்மாநகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் ஓட்டுநராக பணிபுரிந்து 30.11.2011 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற கீழ்க்கண்டுள்ள பணியாளருக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி மற்றும் அரசின் பங்கீட்டுத் தொகை ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியதுள்ளது.

| வ. எண் | பணியாளர் பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை | வட்டி | பங்கீட்டுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அ.அபுபக்கர், ஓட்டுநர் | 30.11.2011 | ரூ.2960/– | ரூ.13039/– | ரூ.10000/– | ரூ.25999 /– |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: அனுமதிக்கலாம்

எச்1/14106/2012

170) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

11. இம்மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பம்பிங் செய்யப்படும், 400மி.மீ. CI குழாயில் வல்லநாடு வாய்க்கால் மேல்புறம் உடைப்பு ஏற்பட்டதை, உடனே சரிசெய்து குடிநீர் விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.67937/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் பதிவு செய்யலாம்

மதிப்பீடு எண் 93A/12–13

171) பதிவு செய்யப்பட்டது

12. இம்மாநகராட்சி பேருந்து நிலையம் (அண்ணா பேருந்து நிலையம்) அமைக்க நில உரிமை மாற்றம் செய்யப்பட்டதற்கு வருவாய்த்துறை வாரியம் (Board) எண் 250 நாள் 26.02.1951ல் நில மதிப்புத் தொகை ரூ.5927.25ம் அதற்குரிய 6% வட்டித் தொகை (26.02.1952 முதல் நடப்பு ஆண்டு வரை 25.06.2012) சேர்த்து மொத்தம் ரூ.199402/–ஐ வசூல் செய்ய சென்னை மாநில கணக்காயர் அவர்களின் 02.09.2005ம் தேதிய கடிதத்தில் ISR 11/LR 111/16–654/94–95/478 மற்றும் வட்டாட்சியர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண் அ1/10501/06 நாள் 11.06.2012 மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முகக் கடிதம் எண் ஜே2/15730/95 நாள் 17.03.2012ஆம் தேதிய கடிதத்தில் மேற்படி தொகையை அரசு கணக்கில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நில மதிப்பு தொகை ரூ.5927/–ஐ முதலில் செலுத்த மாமன்றம் தீர்மான எண் 199 நாள் 28.11.2008ல் அனுமதி வழங்கியுள்ளது.

அண்ணா பேருந்து நிலையம் மாநகராட்சி பராமரிப்பில் பொதுமக்களின் வசதிக்காக பேருந்து நிலையமாக செயல்படுவதால் தூத்துக்குடி வட்டாட்சியரின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நில மதிப்பு கணக்கீட்டு பட்டியலில் தெரிவித்துள்ள நில மதிப்பு தொகை ரூ.5927/– மட்டும் அரசுக் கணக்கில் செலுத்துவதற்கும் அதற்குரிய வட்டித் தொகை ரூ.193475/–ஐ தள்ளுபடி செய்ய கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களை கேட்டுக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

எப்1/4876/05

172) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

13. இம்மாநகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து 31.03.2012 மற்றும் 31.05.2012 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற கீழ்க்கண்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி மற்றும் அரசின் பங்கீட்டுத் தொகை ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியதுள்ளது.

173) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணியாளர் பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை | வட்டி | பங்கீட்டுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | கருப்பசாமி/ கிருஷ்ணன் துப்புரவு பணியாளர் | 31.03.2012 | ரூ.2960/– | ரூ.13454/– | ரூ.10000/– | ரூ.26414/– |
| 2. | மூக்கையா/ராமசாமி மலேரியா பணியாளர் | 31.05.2012 | ரூ.2960/– | ரூ.13662/– | ரூ.10000/– | ரூ.26622/– |
| | **மொத்தம்** | | **ரூ. 5920/–** | **ரூ. 27116/–** | **ரூ.20000/–** | **ரூ.53036/–** |

| | | | |
|---|---|---|---|
| | | எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம்<br>எச்1/9299/2012 | |
| | 14. | தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவில் கொசுக்களை ஒழிக்கக்கூடிய புகைமருந்து அடிக்கும் இயந்திரங்களில் இரண்டு பெரிய இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனால் கொசு, புகை அடிக்கும் பணியில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி இரு இயந்திரங்களை பழுது பார்த்து பயன்படுத்த அதற்கான உத்தேச செலவினங்களுக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம்<br>எச்1/8062/2012 | 174) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 15. | இம்மாநகராட்சி பகுதியுடன் புதியதாக சேர்க்கப்பட்ட முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, சங்கரப்பேரி, மீளவிட்டான் மற்றும் தூத்துக்குடி ரூரல் பஞ்சாயத்துகளில் தினசரி குப்பைகளை அகற்ற மாநகராட்சியில் தற்போது போதுமான வாகன வசதிகள் இல்லாததால் புதிய வாகனங்கள் வாங்கும் வரை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் மூன்று டிப்பர் டிராக்டர்களை அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு அமர்த்திக் கொண்டமைக்கும், அதற்கான உத்தேச செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம்<br>எச்1/9024/2012 | 175) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 16. | இம்மாநகராட்சி இராஜாஜி பூங்காவில் தினசரி சேரும் குப்பைகளை தனியார் மூலம் சுத்தம் செய்திடவும் அதற்கான செலவினங்களுக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 302 நாள் 08.02.2011ல் அனுமதி அளித்துள்ளது.<br><br>தனியார் மூலம் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த காலம் 24.05.2012ல் முடிவு பெற்றுள்ளது. மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் மாநகராட்சி மூலம் மேற்படி பணிகள் மேற்கொள்ள இயலாததால் தொடர்ந்து தனியார் மூலம் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள டெண்டர் கோரலாம்.<br><br>மேலும் தனியார் மூலம் மேற்கண்ட பணிகளுக்கான உத்தேச செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம்<br>எச்1/10008/2011 | 176) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 17. | இம்மாநகராட்சி பகுதி மணிநகர் 2வது தெருவில் கதவு எண் 9ல், தூத்துக்குடி துறைத் தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகம், இயங்கிக் கொண்டு வருகிறது. மேற்படி அலுவலக உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் ஆ1/0470/2012 நாள் 03.04.2012ம் தேதிய கடிதத்தில், இம்மாநகராட்சி பழைய கட்டிட அலுவலகத்தில் ஏதாவது ஒரு காலியிடத்தில் தூத்துக்குடி துறைத்தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி அலுவலகத்திற்கு பழைய மாநகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள வருவாய் உதவியாளர்கள் (Revenue Assistants) அறையில் இட ஒதுக்கீடு செய்வதற்கும் அரசு பொதுப்பணித்துறை விதிகளின்படி மாத வாடகையாக ரூ.8300/– தொகையினை மேற்படி அலுவலகத்திற்கு நிர்ணயம் செய்து வசூல் செய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ5/13441/12 | 177) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 18. | தூத்துக்குடி மாநகரப் பொதுமக்களின் புகார்கள் மற்றும் அரசாணை எண் 106 நாள் 10.06.2008ன் படியும், பாரத பிராணிகள் நலவாரியத்தின் வழிகாட்டுதல்களின்படியும், இம்மாநகராட்சி பகுதியில் சுற்றித் திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியை பொதுமக்களின் நலன்கருதி செய்ய வேண்டியுள்ளது. ஆகவே உத்தேச கணக்கெடுப்பின்படி, 500 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணிக்காக நாய் ஒன்றுக்கு ரூ.445/– வீதம் செலவினமாக ரூ.2,22,500/–ஐ மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்வதற்கும் இச்செலவு தொகையினை 50 விழுக்காடு பாரத பிராணிகள் நலவாரியத்தின் மூலம் மீள பெற்றுக் கொள்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம்<br>எச்4/11648/10 | 178) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 19. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் சாலைகள், தெருக்களில் பொது மக்களுக்கு இடையூறாகவும் போக்குவரத்திற்கு நெருக்கடி ஏற்படுத்திடும் வகையிலும், பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையிலும், பராரியாய் சுற்றித் திரியும் வயது முதிர்ந்த, ஆதரவற்ற, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட கால்நடைகளின் நலன் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், இம்மாநகராட்சியில் நிரந்தர விலங்குகள் உறைவிடம் ஏற்படுத்திட, பாரத பிராணிகள் நல வாரியத்தின் நிர்ணயிக்கப்பட்ட நிலமானது ஒதுக்கீடு செய்து, பாரத பிராணிகள் நல வாரியத்தின் நிதியுதவி பெற்று உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வேண்டப்படுகின்றது.<br>எச்4/15232/12<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** அனுமதிக்கலாம் | 179) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 20. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் சாலைகளில் தெருக்களில் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையிலும், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாகவும், விலங்குகளுக்கு வதைகள் ஏற்படுத்திடும் வகையிலும், விலங்குகளின் உரிமையாளர்களால் மாடுகள், ஆடுகள், பன்றிகள் போன்ற கால்நடைகள் பராரியாய் சுற்றித் திரியும்படியாக செயல்படும் நேர்வினை கட்டுப்படுத்தி தடுத்திட பொதுமக்கள் நலன் கருதியும், விலங்குகள் நலன் கருதியும் அத்தகைய தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகள், ஆடுகள், பன்றிகள் போன்ற விலங்குகளின் உரிமையாளர்களால் தமது சொந்த பொறுப்பில் உரிய முறையில் பாதுகாத்துபராமரித்து வர அறிவுறுத்திடவும்,<br><br>மேற்கூறிய முறையான அறிவிப்பிற்கு பின்னர் மேற்கூறிய முறையில் தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகள், ஆடுகள், பன்றிகள் ஆகியவற்றினை பாரத பிராணிகள் நல வாரியத்தின் அங்கீகாரம் பெற்ற விலங்குகள் நல அமைப்பின் | 180) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>உதவியுடன் பிடிக்கப்பட்டு, இம்மாநகராட்சி ஒதுக்கிடும் உள்கட்டமைப்பில் வைத்து பராமரித்திடவும், அத்தகைய பராமரிப்பின் போது ஒரு வார காலகெடுவிற்குள் அத்தகைய விலங்குகளின் மீது எவரேனும் உரிமை கொண்டாடுபவரின் உரிய ஆவணங்களுடன், இச்செயல் முதல் முறை எனில், இம்மாநகராட்சிக்கு தண்டத் தொகையாக மாடுகள் எனில் மாடு ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு ரூ.200/—ம், ஆடுகள், பன்றிகள் எனில் ஆடு ஒன்றிற்கு பன்றி ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு ரூ.100/—ம் இரண்டாம் முறை செயல் எனில் இத்தண்டத் தொகையில் இரண்டு மடங்கும் (மூன்றாம் முறை செயல் எனில் விலங்குகள் கைப்பற்றுதல் செய்யப்படும்) செலுத்துவதுடன் விலங்குகள் நல அமைப்பினால் மேற்கொள்ளப்படும் கையாளும் கட்டணம் மற்றும் விலங்குகள் பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட விலங்கின் உரிமையாளர்களால் செலுத்தி உரிய உத்திரவாதத்துடன் திரும்ப பெற்றுக் கொள்ளவும், மேற்கூறிய காலகெடுவிற்குள் அத்தகைய பராமரிப்பில் உள்ள விலங்குகளின் மீது எவரேனும் உரிமை கொண்டாடப்படவில்லை, எனில் அத்தகைய விலங்குகள் உரிமையாளர்களற்ற, ஆதரவற்ற, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட விலங்குகளாக கருதப்பட்டு பாரத பிராணிகள் நல வாரியத்தின் அங்கீகரிக்கப்பட்ட விலங்குகள் நல அமைப்பிடம் உரிய ஆவணங்கள் வாயிலாக மாநகராட்சியால் ஒப்படைப்பு செய்யப்படும், விலங்குகள் நல அமைப்பிடம் தொடர் பராமரிப்பிற்காக ஒப்படைப்பு செய்யப்பட்ட விலங்குகள் மீது எவரேனும் உரிமை கொண்டாடினால் உரிய நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும் வழிவகையுடன் கூடிய விலங்குகள் மீட்பு மற்றும் மறு குடியமர்வு எனும் இத்திட்டத்திற்கு மாமன்றம் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>எச்4/15232/12<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>21.</td><td>இம்மாநகராட்சி உள்கட்டமைப்பு ஈடு செய்யும் நிதி (2011—12) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள “Supply delivery and erection of vertical turbine pumpset motor and other accessories in the collectorwell pumproom” என்ற பணிக்கு மாமன்ற தீர்மான எண் 47 நாள் 30.03.2012ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 25.07.2012 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட தொழில்நுட்ப ரீதியாக தகுதியுடைய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி 13.08.2012 அன்று திறக்கப்பட்டது. அதன் ஒப்பு நோக்குப் பட்டியல்<br><br>1) Alchem Industries Mettupalayam — மதிப்பீட்டை விட 0.3% குறைவு (ரூ.5726589/—)<br><br>2) Almech Egnineering Pvt. Ltd. Chennai — மதிப்பீட்டை விட 13.4% அதிகம்<br><br>மேற்படி பணிக்கு விலைக்குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள “Alchem Industries’’ நிறுவனத்தினரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் 16.08.2012 அன்று கடிதம் மூலம் விலைக்குறைப்பு கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: மேற்படி பணிக்கு Alchem Industries மேட்டுப்பாளையம் மதிப்பீட்டை விட 0.33% குறைவாக (ரூ.5724589/—) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>20433/2012/DO</td><td>181) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>22.</td><td>இம்மாநகராட்சி உள்கட்டமைப்பு ஈடு செய்யும் நிதி (2011—12) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள “Supply delivery and erection of 315KVA Transformer and six Pole structure” என்ற பணிக்கு மாமன்ற தீர்மான எண் 47 நாள் 30.03.2012ன்படி</td><td>182) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 25.07.2012 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Almech Engineering Pvt, Ltd, போதிய தொழில்நுட்ப ஆவணங்கள் சமர்ப்பிக்காததால், மேற்படி ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு தொழில்நுட்ப தகுதியுடைய Alchem Industries, மேட்டுப்பாளையம் நிறுவனத்தின் விலைப்புள்ளி 13.08.2012 அன்று திறக்கப்பட்டது. அதன் ஒப்பு நோக்குப் பட்டியல்<br><br>1) Alchem Industries Mettupalayam — மதிப்பீட்டை விட 0.40% குறைவு (ரூ.2764800/–)<br><br>மேற்படி பணிக்கு விலைக்குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Alchem Industries மேட்டுப்பாளையம் நிறுவனத்தினரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் 16.08.2012 அன்று கடிதம் மூலம் விலைக்குறைப்பு கொடுத்துள்ளார். அதன் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மேற்படி பணிக்கு Alchem Industries மேட்டுப்பாளையம் மதிப்பீட்டை விட 0.48% குறைவாக (ரூ.2762800/–) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண் 72/12–13 | |
| | 23. | இம்மாநகராட்சி உள்கட்டமைப்பு ஈடு செய்யும் நிதி (2011–12) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள "Construction of 6m dia collectorwell cum pump house and connected foot bridge from Collectorwell to River bund" பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண் 16897/2012/தி2 நாள் 14.05.2012ன்படி நிர்வாக அனுமதியும், மாமன்ற தீர்மானம் எண் 47 நாள் 30.03.2012ன்படி ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 25.07.2012 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியாக இருந்ததால், 13.08.2012 அன்று அதன் விலைப்புள்ளி திறக்கப்பட்டது. அதன் ஒப்பு நோக்குப் பட்டியல்<br><br>1) Senthil Pile foundation Trichy — மதிப்பீட்டை விட 6.62% அதிகம் (ரூ.15101481.92/–)<br><br>மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Senthil Pile foundation நிறுவனத்தினரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் 16.08.2012 அன்று கடிதம் மூலம் விலைக்குறைப்பு கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** தற்சமயம் கோடை காலமாக இருப்பதாலும், மேற்படி பணி நீர் ஆதாரத்தை அதிகரிக்கும் முக்கியமான பணியாக இருப்பதாலும் குடிநீர் அவசர அவசியம் கருதி, பொறியியல் கையேடு எண் 2.7.2ன்படி மேற்படி பணிக்குபெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளியான Senthil Pile foundation, திருச்சி நிறுவனத்தினர் மதிப்பீட்டை விட 4.89% அதிகமாக (ரூ.14858381.92) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>20433/2012/DO | 183) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 24. இம்மாநகராட்சி வார்டு எண் 1, 2, 3, 5, 17, 18 ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள தெரு பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் இல்லாததால் மாநகராட்சி மூலம் ஒப்பந்த முறையில் வாடகை அடிப்படையில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய பின்வருமாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) மெசர்ஸ் வில்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ், 53ஏ, டூவிபுரம் 4வது தெரு, தூத்துக்குடி<br>2) திரு. தனதுரைசிங், 195, பாளைரோடு, மணிநகர், தூத்துக்குடி<br>3) மெசர்ஸ் ரவி மெட்டல் ஒர்க்ஸ், 56ஏ, விவேகானந்தர் தெரு, திருநகர், வேலூர்.<br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2இல் கண்டுள்ள திரு. தனதுரைசிங் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி உரிய நமூனாவில் விலைவிகிதம் கொடுக்கப்படாததால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ரத்து செய்யப்பட்டுள்ளதை அனுமதிக்கலாம்.<br>மீதமுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை குறைவாக ஒப்பந்தப்புள்ளி (ரூ.549/–) கொடுத்துள்ள, வரிசை எண் 1இல் கண்டுள்ள மெசர்ஸ் வில்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ், தூத்துக்குடி என்ற நிறுவனத்தினரிடம் விலை குறைப்பு கோரப்பட்டது. மேற்படி நிறுவனத்தினர் நடை ஒன்றுக்கு ரூ.437/– என்ற குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் உரிய நமூனாவில் விலைவிகிதம் கொடுக்காத திரு.தனதுரைசிங், தூத்துக்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யலாம்.<br>2) நடை ஒன்றுக்கு ரூ.437/– என்ற குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள மெசர்ஸ் வில்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ், தூத்துக்குடி என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/8451/12 | 184) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 25. தூத்துக்குடி நகராட்சியானது 05.08.2008 முதல் 5 பஞ்சாயத்து பகுதிகளான முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, மீளவிட்டான், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல் ஆகிய பகுதிகளை இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 25.10.2011 முதல் புதிய உள்ளாட்சி உறுப்பினர்களை தேர்வு செய்து மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது.<br>தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பஞ்சாயத்து பகுதிகளையும் இணைத்து நகர விரிவாக்கம் செய்யும் திட்டத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம், சென்னை அவர்களின் மூலம் தொழில்நுட்ப ஆலோசகர் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண் 42165/2007, நாள் 17.08.2012 மின்னஞ்சல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 பஞ்சாயத்து பகுதிகளையும் சேர்த்து அடுத்து ஐந்து ஆண்டுகளுக்கான நகர விரிவாக்கம் திட்டம் (City Development Plan) தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மூலம் செயல்படுத்திடவும், அதற்கான தொழில்நுட்ப ஆலோசகர் நியமனம் செய்திடவும், அதற்காகும் செலவினத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை அவர்கள் மூலம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/17023/2012 | 185) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 26. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் மூன்றின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியானது தூத்துக்குடி மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக ரூ 2447/— இலட்சங்கள் அளவிற்கு கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதன் வட்டி விகிதம் முதல் 18 வருடங்களுக்கு 9.50 சதவீதமும் இரண்டாவது 18 வருடங்களுக்கு 8.50 வீதமும் ஆகும். இம்மாமன்றம் தனது தீர்மானம் எண். 373 நாள் 05.10.2005ஆம் தேதி வாயிலாக இந்த கடனுக்குரிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளது.<br><br>குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் மூலமாக தூத்துக்குடி மாநகராட்சிக்கு மறுகடன் வழங்கவும் இது தொடர்பாக தமிழக அரசு மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் ஆகியவை நிர்ணயித்துள்ள விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுதல், மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டத்திற்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் III ல் பெறப்பட்ட கடன் தொகையினை குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் மூலம் மறுகடன் பெற்று வட்டி தொகை ரூ 4,11,40,000/— ஐ சேமிப்பு வருகின்ற காரணத்தினால் மாமன்றம் தனது தீர்மானம் எண். 169 நாள் 30.07.2010இல் அனுமதி அளித்துள்ளது.<br><br>தற்போது குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் கடிதம் எண். WSPF/TPB/2012/ULBs/05 date 18.08.2012 இன் மூலமாக தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்திற்கு ரூ 20.00 கோடி நிபந்தனைகளுக்கு உட்படுத்தி மறுகடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.<br><br>மேற்கண்ட நிதியத்தின் மூலம் பெறப்படும் கடன் தொகை ரூ 20.00 கோடிக்கான நிபந்தனைகளை மேற்படி கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற இணைப்பு 1இல் கண்டுள்ள வரிசை எண் 1 முதல் 8 வரை கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது மேலும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கான கடன் ஒப்பந்தப்பத்திரத்தில் ஆணையர் அவர்களால் ஒப்பம் செய்து சமர்ப்பிக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** –<br>1. குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் மூலம் பெறப்படும் கடன் தொகை ரூ 20.00 கோடிக்கான நிபந்தனைகளை மேற்படி கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற இணைப்பு 1 இல் கண்டுள்ள வரிசை எண் 1 முதல் 8 வரை கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கான கடன் ஒப்பந்தப்பத்— திரத்தில் ஆணையர் அவர்களால் ஒப்பம் செய்து சமர்ப்பிக்க மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>இ3/11512/07 | 186) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 27. இம்மாநகராட்சி பகுதிகளில் இருக்கும் இரண்டாம் நிலை குப்பைகள் வடிகால் கழிவு மண்ணை அகற்றும் பொருட்டு இரண்டு எண்ணம் Mini Tipper Lorry (TATA LPK 909 Tipper with Power steering) TATA Motors Authorised Dealer யிடம் நேரடியாக வாங்குவதற்கும் அதற்குரிய செலவு தொகை IUDM Fundல் சேமிப்பு தொகையிலிருந்து மேற்படி வாகனத்தை வாங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. தோராய செலவு ரூ 23.00 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்1.8025/12 | 187) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 28. | இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து **30.06.2012** அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற கீழ்க்கண்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை வட்டி மற்றும் அரசின் பங்கீட்டுத் தொகை ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியுள்ளது. | **188)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியாளர்பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேம நலநிதி சந்தா தொகை | வட்டி | பங்கீட்டுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆறுமுகம்மாள்/ பெருமாள் | 30.06.2012 | 2960 | 13766 | 10000 | 26726 |
| 2 | கருப்பசாமி/பெருமாள் | 30.06.2012 | 2960 | 13766 | 10000 | 26726 |
| 3 | அகஸ்டின்/ தேவ இரக்கம் | 30.06.2012 | 2960 | 13766 | 10000 | 26726 |
| 4 | லட்சுமணன்/முருகன் | 30.06.2012 | 2960 | 13766 | 10000 | 26726 |
| 5 | வேலம்மாள்/கருப்பன் | 30.06.2012 | 2960 | 13766 | 10000 | 26726 |
| 6 | முனியம்மாள்/வேலு | 30.06.2012 | 2960 | 4733 | 10000 | 17693 |
| 7 | முத்துவீரன்/சுப்பன் | 30.06.2012 | 2960 | 13766 | 10000 | 26726 |
| 8 | அந்தோணிஜோசப்/ தொம்மை | 30.06.2012 | 2960 | 13766 | 10000 | 26726 |
| 9 | கணேசன்/சண்முகம் | 30.06.2012 | 2960 | 13766 | 10000 | 26726 |
| | மொத்தம் | | 26640 | 114861 | 90000 | 231501 |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்

எச்2/8910/2012